**வேளாண் மற்றும் தோட்டக்கலை விளைபொருட்களின் தினசரி சந்தை நிலவரம் ஏற்படுத்திய மாற்றம் மற்றும் எனது அனுபவங்கள்:**

**வி.பரமசிவம்,**
**த/பெ. ஏ.வீரத்தேவர்,**
**4/26, மொட்டையநாயக்கன்பட்டி,**
**கருமாத்தூர் (PO),**
**உசிலம்பட்டி (TK), மதுரை (Dt).**
**அலைபேசி: 9943338147**



---

மதுரை மாவட்டம் கருமாத்தூர் பகுதியில் வசித்து வரும் வி.பரமசிவம், ஆகிய நான் கடந்த பல வருடங்களாக எனது நிலத்தில் கத்தரிக்காய், வெண்டை, சம்பங்கி, புடலங்காய், சுரைக்காய், கொத்தவரை மற்றும் தக்காளி ஆகிய பயிர்களை பயிரிட்டு விவசாயம் செய்து வருகிறேன். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தினசரி சந்தை நிலவரம் (www.indg.in) ஏற்படுத்திய மாற்றம் மற்றும் எனது அனுபவங்களை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

தென் தமிழக மாவட்டங்களில் விவசாய காய்கனி வளாக மையங்கள் மற்றும் விவசாய சந்தைகள் இருந்தாலும் அதற்கு உரிய உள்கட்டமைப்பு வசதிகளும், விவசாயிகளுக்கு ஊக்க திட்டங்களும் செயல்படுத்தப்படவில்லை. விவசாயிகள் இன்னமும் வியாபாரிகளை சார்ந்தே இருக்கின்றனர். வியாபாரிகள் வங்கிகளையும், இடைத்தரகர்களையும், வட்டிக்கடைக்காரர்களையும் சார்ந்து இருக்கின்றனர். இந்த நிலையில் தான் தினசரி சந்தை நிலவரம் என்னவென்றே தெரியாமல் இருந்த எங்களுக்கு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் விரிவாக்க கல்வி இயக்கத்தின் (SAMETI) சார்பில் அவர்கள் வழங்கிய வேளாண் மற்றும் தோட்டக்கலை விளைபொருட்களின் தினசரி சந்தை நிலவரம் எனது விவசாய வாழ்விற்கு ஒரு திருப்பு முனையாகவும் அவர்கள் வழங்கிய தினசரி சந்தை நிலவர பட்டியல் எனது உழைப்பிற்கு பேருதவியாக அமைந்தது.

நான் கடந்த 10 ஆண்டுகளாக விவசாயம் செய்து வருகிறேன். காய்கனிகள் மற்றும் கிழங்கு வகைகளை பயிர் செய்து உள்ளூர் வியாபாரகளுக்கும், கமிஷன் கடைகளுக்கும் அவர்கள் கேட்ட விலைக்கு கொடுத்து வந்தேன். காரணம் என்னவென்றால், நான் வசிக்கும் பகுதியும் பயிரிட்டிருக்கும் இடமும் மிகவும் பின்தங்கிய பகுதி என்பதால் மேலும் எனது ஊரில் தகவல் தொழில் நுட்ப வசதியும் மற்றும் சந்தை நிலவரங்களை அறிய போதிய வசதி இல்லாததால் நான் உற்பத்தி செய்யும் காய்கனிகளை உள்ளூர் வியாபாரகளுக்கும், கமிஷன் கடைக்காரர்களுக்கும் அவர்கள் கேட்ட விலைக்கே கொடுத்துவிட்டு நான் முதலீடு செய்த தொகைக்கு கூடுதலாக சில ஆயிரங்களையே இலாபமும், சில நேரங்களில் நஷ்டமும் சந்தித்து வந்தேன். இதனால் நான் உற்பத்தி செய்யும் காய்கனிகளுக்கும் உண்மையான விலை என்னவென்றே தெரியாமல் இருந்து வந்தேன்.

உள்ளூர் சந்தையில் ஒரு கிலோ தக்காளி, வெண்டைக்காய், போன்ற காய்கனிகளை ரூபாய் 5 முதல் 10 வரை மட்டுமே விற்பனை செய்து வந்த என்னை, சென்னை கோயம்பேடு, ஒசூர், கோவை, ஒட்டன்சத்திரம், திருச்சி, திருநெல்வேலி, போன்ற மிகப்பெரிய சநதைகளை எனக்கு அறிமுகம் செய்ததோடு இல்லாமல் அந்தந்த சந்தைகளின் தினசரி நிலவரத்தினை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் விரிவாக்க கல்வி இயக்ககம் (SAMETI) மூலமாக கைபேசியில் சிறு தகவல் (SMS) வழியாக அறிந்து கொள்வதால் இதுவரை நான் உற்பத்தி செய்து வந்த காய்கனிகளின் விலையை நானே நிர்ணயித்து எந்த ஒரு இடைத்தரகர்களின் இடையூறு இல்லாமல் தமிழகத்தின் மற்ற மாவட்டங்களில் உள்ள விவசாய சந்தைகளில் நானே நேரடியாக எனது காய்கனிகளை வியாபாரம் செய்கிறேன். இதனால் சில ஆயிரங்களையும் சில நேரங்களில் நஷ்டத்தையும் சந்தித்து வந்த நான் மற்றும் என்னைப் போல விவசாயிகளும் இனிமேல் ஆண்டுக்கு 1 முதல் 2 இலட்சங்களை பெறுவோம் என்றால் அது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் விரிவாக்க கல்வி இயக்ககம் மற்றும் இந்திய முன்னேற்ற நுழைவாயில், உன்னத கணிப்பியல் வளர்ச்சி மையம் (C-DAC) இணைந்து வழங்கும் தினசரி சந்தை நிலவரம் (DMI) இத்திட்டத்தின் மூலமும், தன்னலமற்ற தமிழ்நாடு வேளாண் விஞ்ஞானிகளின் ஈடு இணையில்லா அயராத உழைப்புமே ஆகும் என்பதை மனநிறைவோடு கூறிக்கொள்வதில் பெருமிதமும் பெருமகிழ்ச்சியும் அடைகிறேன்.

எதிர்காலத்தில் தமிழகம் மட்டுமில்லாமல் இந்தியாவின் பிற மாநிலங்களிலும் உள்ள விவசாய சந்தைகளின் தினசரி சந்தை நிலவரத்தினை அறிமுகப்படுத்தினால் நானும் என்னை போன்ற பல விவசாய மக்களும் இன்னும் முனைப்போடு விவசாயம் செய்வதோடு அல்லாமல், எங்கள் வாழ்வில் மேலும் பல முன்னேற்றங்கள் அடைவோம் என்று கூறி வேளாண் விஞ்ஞானிகளுக்கு மீண்டும் ஒரு முறை என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள
வி.பரமசிவம்
9943338147